ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 10.7 – மானமுடைத்து

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 10.7 – மானமுடைத்து

‡ மானம் உடைத்துங்கள் ஆயர் குலம் அதனால் ⋆
பிறர் மக்கள் தம்மை ⋆
ஊனம் உடையன செய்யப் பெறாய் என்று ⋆
இரப்பன் உரப்பகில்லேன் ⋆
நானும் உரைத்திலேன் நந்தன் பணித்திலன் ⋆
நங்கைகாள் ! நான் என் செய்கேன் ⋆
தானும் ஓர் கன்னியும் கீழை அகத்துத் ⋆
தயிர் கடைகின்றான் போலும் ‖ **10.7.1** ‖

காலை எழுந்து கடைந்த இம்மோர் விற்கப் போகின்றேன் ⋆
கண்டே போனேன் ⋆
மாலை நறுங்குஞ்சி நந்தன் மகன் அல்லால் ⋆
மற்று வந்தாரும் இல்லை ⋆
மேலை அகத்து நங்காய் ! வந்து காண்மின்கள் ⋆
வெண்ணெயே அன்று ⋆
இருந்த பாலும் பதின் குடம் கண்டிலேன் ⋆
பாவியேன் என் செய்கேன் என் செய்கேனோ ‖ **10.7.2** ‖

தெள்ளிய வாய்ச் சிறியான் நங்கைகாள் ! ⋆
உறி மேலைத் தடா நிறைந்த ⋆
வெள்ளி மலை இருந்தால் ஒத்த வெண்ணெயை ⋆
வாரி விழுங்கிட்டு ⋆
கள்வன் உறங்குகின்றான் வந்து காண்மின்கள் ⋆

கை எல்லாம் நெய் வயிறு பிள்ளை பரம் அன்று ⋆
இவ்வேழ் உலகும் கொள்ளும் ⋆
பேதையேன் என் செய்கேனோ ॥ **10.7.3** ॥

மைந்நம்பு வேற் கண் நல்லாள் ⋆
முன்னம் பெற்ற வளை வண்ண நல் மா மேனி ⋆
தன் நம்பி நம்பியும் இங்கு வளர்ந்தது ⋆
அவன் இவை செய்தறியான் ⋆
பொய்ந்நம்பி புள்ளுவன் கள்வம் பொதி அறை ⋆
போகின்றவா தவழ்ந்திட்டு ⋆
இந்நம்பி நம்பியா ஆய்ச்சியர்க்குய்வில்லை ⋆
என் செய்கேன் என் செய்கேனோ ॥ **10.7.4** ॥

தந்தை புகுந்திலன் நான் இங்கிருந்திலேன் ⋆
தோழிமார் ஆரும் இல்லை ⋆
சந்த மலர்க் குழலாள் ⋆
தனியே விளையாடும் இடம் குறுகி ⋆
பந்து பறித்துத் துகில் பற்றிக் கீறிப் ⋆
படிறன் படிறு செய்யும் ⋆
நந்தன் மதலைக்கிங்கென் கடவோம் ⋆
நங்காய் ! என் செய்கேன் என் செய்கேனோ ॥ **10.7.5** ॥

மண் மகள் கேள்வன் மலர் மங்கை நாயகன் ⋆
நந்தன் பெற்ற மதலை ⋆
அண்ணல் இலைக் குழல் ஊதி நம் சேரிக்கே ⋆
அல்லுத் தான் வந்த பின்னை ⋆
கண் மலர் சோர்ந்து முலை வந்து விம்மிக் ⋆
கமலச் செவ்வாய் வெளுப்ப ⋆

என் மகள் வண்ணம் இருக்கின்றவா நங்காய் ! ⋆
என் செய்கேன் என் செய்கேனோ ॥ **10.7.6** ॥

ஆயிரம் கண் உடை இந்திரனாருக்கென்று ⋆
ஆயர் விழவெடுப்ப ⋆
பாசன நல்லன பண்டிகளால் ⋆
புகப் பெய்த அதனை எல்லாம் ⋆
போயிருந்தங்கொரு பூத வடிவு கொண்டு ⋆
உன் மகன் இன்று நங்காய் ⋆
மாயன் அதனை எல்லாம் முற்ற வாரி ⋆
வளைத்துண்டிருந்தான் போலும் ॥ **10.7.7** ॥

தோய்த்த தயிரும் நறு நெய்யும் பாலும் ⋆
ஓர் ஓர் குடம் துற்றிடும் என்று ⋆
ஆய்ச்சியர் கூடி அழைக்கவும் ⋆
நான் இதற்கெள்கி இவனை நங்காய் ⋆
சோத்தம் பிரான் ! இவை செய்யப் பெறாய் என்று ⋆
இரப்பன் உரப்பகில்லேன் ⋆
பேய்ச்சி முலை உண்ட பின்னை ⋆
இப்பிள்ளையைப் பேசுவதஞ்சுவனே ॥ **10.7.8** ॥

ஈடும் வலியும் உடைய ⋆
இந்நம்பி பிறந்த ஏழு திங்களில் ⋆
ஏடலர் கண்ணியினானை வளர்த்தி ⋆
யமுனை நீராடப் போனேன் ⋆
சேடன் திருமறு மார்பன் ⋆
கிடந்து திருவடியால் ⋆

மலை போல ஓடும் சகடத்தைச் சாடிய பின்னை ⋆
உரப்புவதஞ்சுவனே ॥ **10.7.9** ॥

அஞ்சுவன் சொல்லி அழைத்திட நங்கைகாள் ! ⋆
ஆயிர நாழி நெய்யைப் ⋆
பஞ்சிய மெல் அடிப் பிள்ளைகள் உண்கின்ற ⋆
பாகம் தான் வையார்களே ⋆
கஞ்சன் கடியன் கறவெட்டு நாளில் ⋆
என் கை வலத்தாதும் இல்லை ⋆
நெஞ்சத்திருப்பன செய்து வைத்தாய் நம்பீ ! ⋆
என் செய்கேன் என் செய்கேனோ ॥ **10.7.10** ॥

அங்ஙனம் தீமைகள் செய்வர்களோ நம்பீ ! ⋆
ஆயர் மட மக்களைப் ⋆
பங்கய நீர் குடைந்தாடுகின்றார்கள் ⋆
பின்னே சென்றொளித்திருந்து ⋆
அங்கவர் பூந் துகில் வாரிக் கொண்டிட்டு ⋆
அரவேர் இடையார் இரப்ப ⋆
மங்கை நல்லீர் ! வந்து கொண்மின் என்று ⋆
மரம் ஏறி இருந்தாய் போலும் ॥ **10.7.11** ॥

அச்சம் தினைத்தனை இல்லை இப்பிள்ளைக்கு ⋆
ஆண்மையும் சேவகமும் ⋆
உச்சியில் முத்தி வளர்த்தெடுத்தேனுக்கு ⋆
உரைத்திலன் தான் இன்று போய் ⋆
பச்சிலைப் பூங்கடம்பேறி ⋆
விசை கொண்டு பாய்ந்து புக்கு ⋆

ஆயிர வாய் நச்சழற் பொய்கையில் நாகத்தினோடு ⋆
பிணங்கி நீ வந்தாய் போலும் ॥ **10.7.12** ॥

தம்பரம் அல்லன ஆண்மைகளைத் ⋆
தனியே நின்று தாம் செய்வரோ ⋆
எம்பெருமான் ! உன்னைப் பெற்ற வயிறுடையேன் ⋆
இனி யான் என் செய்கேன் ⋆
அம்பரம் ஏழும் அதிரும் இடி குரல் ⋆
அங்கனற் செங்கண் உடை ⋆
வம்பவிழ் கானத்து மால் விடையோடு ⋆
பிணங்கி நீ வந்தாய் போலும் ॥ **10.7.13** ॥

‡ அன்ன நடை மட ஆய்ச்சி வயிறடித்தஞ்ச ⋆
அருவரை போல் ⋆
மன்னு கருங்களிற்றாருயிர் வவ்விய ⋆
மைந்தனை மா கடல் சூழ் ⋆
கன்னி நல் மா மதிள் மங்கையர் காவலன் ⋆
காமரு சீர்க் கலிகன்றி ⋆
இன் இசை மாலைகள் ஈர் ஏழும் வல்லவர்க்கு ⋆
ஏதும் இடர் இல்லையே ॥ **10.7.14** ॥

அடிவரவு — மானம் காலை தெள்ளிய மை தந்தை மண்மகள் ஆயிரம் தோய்த்த ஈடும் அஞ்சுவன் அங்ஙனம் அச்சம் தம்பரம் அன்னம் காதில்

மானமுடைத்து முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்